# ஐம்புலன்

**ப. சொக்கலிங்கம்**

**சோலைப் பதிப்பகம்**
22/2, சின்னையா நியூ காலனி, 2வது மெயின் ரோடு,
பெரம்பூர், சென்னை – 600 011. செல் 98405 27782

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **ஐம்புலன்** |
| நூலாசிரியர் | : | **ப. சொக்கலிங்கம்**<br>62, விக்டோரியா கார்ட்டன்ஸ்,<br>20, ஜவஹர்லால் நேரு சாலை,<br>கோயம்பேடு, சென்னை – 600 107.<br>செல் 99400 84290 chockalingam66@gmail.com |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | கவிதைகள் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2021 |
| வெளியீடு | : | சோலைப் பதிப்பகம்<br>22/2, ஏ.பி. அனுக்கிரஹா அபார்ட்மென்ட்,<br>சின்னையா நியூ காலனி 2வது மெயின் ரோடு,<br>பெரம்பூர், சென்னை – 600 011. |
| மொத்தப் பக்கங்கள் | : | 80 |
| தாளின் தன்மை | : | மேப்ளித்தோ 18.6 |
| எழுத்தளவு | : | 12 |
| கட்டடம் | : | ஆர்ட் போர்டு (லேமினேஷன்) |
| அச்சுக்கோப்பு<br>மற்றும் அச்சு | : | சோலை பிரிண்டர்ஸ் & கிராபிக்ஸ்<br>எண். 51/1, பி.பி. ரோடு, பெரம்பூர்,<br>சென்னை – 600 011.<br>செல் : 98405 27782 |
| **விலை** | : | **ரூ 80/-** |



# சமர்ப்பணம்

12.09.2021 அன்று நூறாவது நினைவு நாள் கண்டு,
இன்றைக்கும் தவிர்க்க முடியாத
சக்தியாக விளங்கும்
மகாகவி சுப்ரமணிய பாரதியார் அவர்களுக்கு
இந்த நூல் சமர்ப்பணம்

## நூறாண்டு கடந்தும் பாவாண்ட பாரதி

**வ**றுமையிலும் நிரம்பியிருந்தது உன் பேனா மை
அது தீராது கொடுத்தது உன் வார்த்தைகளுக்கு வல்லமை

அச்சமில்லை என முழங்கி அச்சத்திற்கே அச்சம் தந்தாய்
துணிந்ததால் உனக்குத் துக்கம் இல்லை, ஆங்கிலேயருக்குத் தூக்கம் இல்லை

உணர்ந்ததை எழுதி, எழுதியதாய் வாழ்ந்தாய்
ஏட்டுச் சுரைக்காயில் கறி சமைத்துக் காட்டியவாறே

உன் வார்த்தைக்கட்டு ஒரு அவிழாத முண்டாசு
அது படிப்பவர்களைப் பரவசப்படுத்தும் சரவெடி பட்டாசு

பெண்ணியம் எழுதியதில் உனக்கிருந்தது கண்ணியம்
போராடிப் பெண்மையை போற்றியதில் வெளிப்பட்டது உன் ஆண்மை

தீண்டாமை தீண்டினாய் கொத்தும் வரிகளில்
ஈசனாய் காணப்பட்டாய் வறண்டிருந்த கண்களில்

வார்த்தைகள் மீசை முறுக்கின உன் சீட்டுக்கவியில்
நெஞ்சு நிமிர்த்தி, பெரிதினும் பெரிது கேட்ட கவிஞன் நீ

வீரமும்,ஈரமும் ஒருசேர உன் மனதில்
கொஞ்சலும், ரௌத்திரமும் கருத்துச் செறிவான உன் கவிதைகளில்

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டியதில் தெரிந்தது உன் வழி தனி வழியென்று
தையலை உயர்வு செய்து, கடைக்கோடிக்கும் தமிழ் சேர்த்த சாரதி நீ

பரம்பொருளென மதங்களின்மேல் வைத்திருந்தாய் நம்பிக்கை
வெறும்பொருளென உதறியது உன்னை ஒரு மதம் பிடித்த தும்பிக்கை

“சந்தரிசையின் கதை” முடியும் முன்பே முடிந்தது உன் கதை
விதவை மறுமணம் பரவலாய் நனவாகா உன் இன்னுமொரு கனவு

உன் கவிதைகளை என்றைக்கும் உயிர்ப்போடு வைத்திருப்போம்
சாதி மத பேதங்களை விடாது வளர்த்துக் கொண்டு.

**- ப. சொக்கலிங்கம்**

## மதிப்புரை

**– தத்துவக்கவிச்சுடர் துருவன்**

'ஐம்புலன்' எனப்படும் இக்கவிதை நூல் கவிஞர் ப. சொக்கலிங்கம் அவர்களால் படைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு இந்த நூலாசிரியர் 'பஞ்சவர்ணக்கிளி', 'அஞ்சறைப்பெட்டி' போன்ற அருமையான கவிதை நூல்களைப் படைத்தவர் என்பது கூடுதல் சிறப்பு. இவர் சிறந்த சிந்தனையாளர் என்பது இவரின் முந்தைய நூல்களைப் படித்தபோது தெரியவந்தது.

மிகச்சிறிய வரிகளையுடைய புதுக்கவிதைகளும் சில குறும் பாக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. படிக்க இன்பம் தரும் இப்பாடல்களில் சிந்தனை ஊற்றுச் சிறப்புச் சொற்களும் தவறாது இழையோடுகின்றன.

காதல் உணர்வாக, தையல் என்றொரு கவிதை. அதில்,

***தையலின் பார்வை***
***போட்டுவிட்டது மனதில்***
***ஊசியின்றி ஒரு தையலை***

சொற்களை வைத்து சிலம்பம் செய்கிறார் கவிஞர்.

இயற்கையின் சிறப்பாக உரையாடல்கள் என்ற கவிதையில்

***கரையோரத் தென்னைகளுக்கும்,***
***கடலிற்குமிடையே உரையாடல்***
***காற்றின் மொழியில்***

என்று கூறும்போது நதி, கரை, தென்னை மரம், கடல் என இயற்கையின் கூறுகள் இடம்பெறுகின்றன. தம்மினத்துக்கு உணவிட்ட பாரதியாரை அவர் சிலையான பின்னும் காக்கை, குருவிகள் சுற்றி வருவதாக செய்ந்நன்றியறிதலை தற்குறிப்பேற்றபடியாக கவிஞர் பாடுகிறார்.

*கடற்கரை சாலையில்*
*சான்றோர்கள் சிலைகள்*
*குருவிகளும் காகங்களும்*
*பசியோடு*
*பாரதி சிலையை மட்டும் சுற்றியவாறே*

மேலும், 'அஸ்திவாரம்' என்ற கவிதையில் பிறருக்காக வாழும் மனிதரைப் போன்று இரக்க குணத்தில் தனது வேர்களை அதிக மாகவே பூமியில் பரப்புகின்றன மரங்கள் என்கிறார் கவிஞர்.

*சற்று அதிகமாகவே*
*வேர் பரப்புகின்றன மரங்கள்*
*பறவை கூடுகளின் எடையையும்*
*கணக்கில் கொண்டு*

காதலின் புன்னகை என்ற கவிதையில்

*புவியீர்ப்பு விசை*
*மாயமானது*
*உன் புன்னகை முன்னால்*
*பறந்து கொண்டிருக்கிறேன்*

என்று காதலியின் புன்னகை தன்னை இலேசாக மாற்றி பறக்கவிட்ட தாகப் பாடுகிறார் சொக்கலிங்கம்.

இப்படி இந்நூல் முழுவதும் தன் சிந்தனைகளை வளர்த்து படிப்போரை ஈர்க்கும் வகையில் கவிதை படைத்துள்ள கவிஞர் ப. சொக்கலிங்கம் அவர்கள் தகவல் தொழில்நுட்பப் பொறிஞர். ஆயினும் சிறந்த தமிழ் ஆர்வம் கொண்டவராய் கவிதை வானில் வலம் வருவது நூலாசிரியர்க்கு நிச்சயம் பெருமை சேர்க்கும்.

வாழ்க கவிஞர்! வளர்க அவர் திறம்!!

**- துருவன்**


7

# மானுடநேயத்தின் முகவரியை மலரவைக்கும் 'ஐம்புலன்கள்'!

கவிஞர் **சொர்ணபாரதி**
ஆசிரியர், கல்வெட்டு பேசுகிறது

**ப.** சொக்கலிங்கம் அவர்களது மூன்றாவது நூலான 'ஐம்புலன்' கவிதை நூலுக்கு முன்னுரை எழுதும் அரிய வாய்ப்பினை பதிப்பாளர் நண்பர் சோலை தமிழினியன் வழங்கியது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய செயலாகும்.

ஐந்து என்ற எண் சிறப்புக்குரிய எண்ணாகும். ஐம்புலன்கள் என்பது கேட்டல், பார்த்தல், நுகர்தல், சுவைத்தல், உணர்தல் என்ற நம் உடலின் முக்கியமான ஐந்து இயக்கங்களைக் குறிக்கிறது. ஐந்து என்பது தமிழ் இலக்கியத்தில், தமிழ் பக்தி மரபில் தொடர்ந்து வருகின்ற ஓர் எண்ணாகும். சங்க இலக்கியங்களில் தமிழர்களின் நிலங்கள் ஐந்து, பஞ்சபூதங்கள் ஐந்து. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகள். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற ஐந்து பூதங்கள். சிவனின் தாண்டவம் நடைபெற்ற சபைகள் ஐந்து. புண்ணிய நதிகள் ஐந்து என ஐந்து என்பது தமிழர்களின் வாழ்வியலோடு கலந்த ஒன்றாக உள்ளது. இந்தச் சூழலில் கவிஞர் சொக்கலிங்கம் அவர்கள் 'ஐம்புலன்' என்ற கவிதை நூலை நமக்குத் தந்திருக்கிறார்.

2700 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியம் பல்வேறு வடிவங்களைத் தாங்கி ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு புதிய வகைக்கு மாறி வளர்ந்துள்ளது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்ற சங்க இலக்கியத்திலிருந்து வளர்ச்சி பெற்று நீதி நூல்கள் காலம், சமண புத்த காப்பியங்களின் காலம், பக்தி இலக்கியக் காலம், சிற்றிலக்கியங்களின் காலம், வசன கவிதைகள் காலம், நவீன இலக்கியத்தின் காலம் எனப் பல வடிவங்களைத் தாங்கி வந்துள்ள தமிழ் இலக்கியத்தின் நீட்சியில் இன்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு புதிய வடிவில் கவிதைகளைப் படைக்கின்றனர். ஹைக்கூவில் பல வகைகள் வந்திருக்கின்றன. பாரதி தொடங்கி வைத்த வசனக்கவிதைப் புரட்சி என்பது எழுத்து, சரஸ்வதி, வானம்பாடி என்று பல்வேறு திசைகளில் விரிந்து இன்று புதிய வீச்சை அடைந்துள்ளது. இவ்வகையில் இக்கவிதை நூலான 'ஐம்புலன்' என்பது கவிஞர் தான் கேட்ட, பார்த்த, சுவைத்த, நுகர்ந்த, உணர்ந்த விஷயங்களைக் கவிதைகளாக வழங்கியுள்ளார். பல கவிதைகள் குறுங்கவிதைகளாகவும் சில கவிதைகள் நீள் கவிதைகளாகவும் உள்ளன.

இன்று உலகம் சந்தித்துக் கொண்டிருக்கின்ற மிக இக்கட்டான நோய்த்தொற்று உலகம் முழுவதையும் ஆக்கிரமித்திருக்கும் சூழலில், தனித்து விடப்பட்ட மானுட இனம் தன் உணர்வுகளை, தன் அவலங்களை, தன் இருப்பை வெளிப்படுத்த இலக்கியம் ஒரு பெரும் காரணியாக அமைந்துள்ளது. அந்தத் தனிமையில் தன் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள ப.சொக்கலிங்கம் முயற்சி செய்திருக்கிறார். இந்த நூலில் பல கவிதைகளை வழங்கியிருக்கிற அவர் தனது பாடு பொருள்களை மிக எளிதாக அடையாளம் கண்டிருக்கிறார்.

மழை பற்றி அதிகமான கவிதைகளில் பேசுகிறார். மரத்தைப் பற்றிச் சொல்கிறார். நடைப்பயிற்சி, காதல், பசி, ஒத்தையடிப்பாதை, விவசாயம், வண்ணத்துப்பூச்சிகள் என மனித வாழ்வியல் சார்ந்தும், இயற்கை சார்ந்தும் பல கவிதைகளில் தனது கவனத்தைச் செலுத்தி யிருக்கிறார். இந்நூலின் வாயிலாக நான் அறிய முற்படுவது இவர் சிறந்த மானுட நேயராகவும், இயற்கையை நேசிப்பராகவும், பிற உயிர்கள் மீது அன்பு செலுத்துபவராகவும் தன்னை வெளிப்படுத்தி இருக்கிறார். அவரது இயல்பின் வாசம் கவிதைகளில் வெளிப்படுகிறது.

இதனிடையே ஆழ்வார்குறிச்சியைப் பற்றி ஒரு சில கவிதைகளில் குறிப்பிடுகிறார். அவரின் ஊர் ஆழ்வார்குறிச்சி என நினைக்கிறேன்.

ஆழ்வார்குறிச்சி பாடல் பெற்ற சிவத்தலம் ஆகும். வன்னியப்பர் சிவகாமியம்மன் ஆலயமும், சிவசைலம் சிவசைலப்பர் பரமகல்யாணி யம்மன் ஆலயமும் உள்ள புனிதத் தலமாகும். அதன் நினைவுகளைச் சொல்லும் போது கூட அவர் பக்தி பற்றிச் சொல்லாமல் ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் தொழில் சார்ந்த விஷயங்கள் எவ்வாறு நவீனமாக மாறியிருக்கிறது என்பதைச் சொல்கிறார். பல கவிதைகளில் தான் தேர்ந்தெடுத்த சிறுசிறு விஷயங்களைக் கூட மிகவும் தெளிவாக, சுவைபடச் சில கவிதைகளில் நகைச்சுவையோடு வெளிப்படுத்துகிறார்.

பல கவிதைகளை இந்நூலில் நாம் கோடிட்டுக் காட்டலாம். ஆனால் ஒரு முன்னுரை என்பது ஆய்வுரையாக மாறிவிடக்கூடாது என்ற உணர்வோடு இந்த முன்னுரையைக் கையாள நினைக்கிறேன். வெளிநாட்டில் பணியாற்றுகிற ஒருவருக்கு தன் பிறந்த ஊரின் நினைவுகள் ஏற்படுத்தும் ஆனந்தக் கண்ணீர்தான் அருந்தும் குளிரூட்டப்பட்ட தேநீரின் சுவையையும் அதிகப்படுத்தும் என்பதை

**சொந்தமண் நினைவுகள் சுரந்த**
**ஆனந்தக் கண்ணீரால்**
**சுவை கூடியிருந்தது**
**குளிரூட்டப்பட்ட தேநீரில்**

கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

'முற்றத்துப் பழக்கம்' என்ற கவிதை, கடற்கரையில் எல்லாச் சிலைகளும் உள்ளன. ஆனால் பாரதி சிலையைச் சுற்றி மட்டுமே பறவைகள் பறப்பதாக வேறோர் புனைவுத் தளத்தில் விரிக்கிறார். ஆம் அவன் தானே பாடினான் காக்கை குருவி எங்கள் சாதி எனப் பாடினான். 1914ல் புதுவையில் ஏற்பட்ட பெரும் புயலில் பல நூறு மரங்கள் சாய்ந்தன. மற்றவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொண்ட போது, பாரதி மட்டும், தன் நண்பர்களோடு சேர்ந்து இறந்து கிடந்த பறவைகளை எடுத்துக் சென்று அடக்கம் செய்தானாம். தன் மனைவி சமைப்பதற்காகக் கடன் வாங்கி வந்த அரிசியை அள்ளி வீட்டுக்குள் முற்றத்தில் வந்தமர்ந்த குருவிகளுக்கு உணவு படைத்தவன். அத்தன்மையை புதிய உத்தியில் நினைவு படுத்துகிறார் கவிஞர்.

'ஆனந்தக் கண்ணீர்' கவிதையில் மழை நீர் இலைகளிலிருந்து வடிவதை மழை நின்றதால் வடிக்கும் ஆனந்தக் கண்ணீர் என்பது இயற்கை சார்ந்த அழகியலின் உச்சம்.

**மழை பெய்து ஓய்ந்தது**
**புகுந்தவீடு செல்லும் மணப்பெண் போல**
**மரத்து இலைகளின் நுனியில்**
**கண்ணீர் ததும்ப**
**பிரிய மனமின்றி**
**பிரியாவிடை பெற்றுக் கொண்டிருந்தன**
**மழைத் துளிகள்**
**கலங்கிப் போய்**
**பார்த்துக் கொண்டிருந்த காற்று**
**தான் வீச மறுத்தது**

இக் கவிதையில் மரத்திலிருந்து விழும் மழைத்துளியை, பிறந்த வீட்டைப் பிரிய மனமின்றி அழும் மணப்பெண்ணுக்கு உவமையாக்கு வது இதுவரை யாரும் சொல்லாத படிமமாக நான் எண்ணுகிறேன்.

**தன் முகத்தை**
**யாராவது**
**காட்ட மாட்டார்களா**
**ஏக்கத்தோடு சுவரில்**

(நிலைக்கண்ணாடி) கவிதை ஒரு புதிய பார்வை. எல்லோரும் அவரவர் முகத்தை கண்ணாடியில் பார்ப்பது வழமை. ஆனால் இக்கவிதையில் ஒரு கண்ணாடி தன்னைப் பார்த்துக் கொள்ள

முடியவில்லை என வருந்துகிறது. இக்கவிதையை மனதர்களில் வாழ்வியலோடு பல வகைகளில் பொருதிப் பார்க்கலாம்.

இவ்வாறு தொடர்ந்து பல கவிதைகளைக் சொல்லிப் போகலாம். ஸ்பரிசம், மனதின் பயணம் அலைப்பேச்சு, கண்கள், அளவீடு, குதூகலம், வெள்ளம் என சிறப்பான கவிதைகள் தொடர்கின்றன.

'பசி' என்ற தலைப்பில் இரு கவிதைகள். தொட்டிக்குள் நீந்தும் மீனின் பசிக்கு உணவிடாது உறங்கும் மனிதர் பற்றியும், பாரதி விழா அரங்கில் தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் என முழக்கம் கேட்க. வெளியே உணவுக்காகக் கையேந்தும் முதியவர்கள் எனும் இரு எள்ளல்சுவை மிக்க சிந்திக்க வைக்கும் கவிதைகள்.

'மாற்றம்' என்ற கவிதை தன் இளமையில் ஆழ்வார்குறிச்சியில் நடைபெற்ற விவசாயப் பணிகளை விவரித்துப் பின், ஆண்டு முழுதும் வீடுகள் தோறும் சென்று முகம் மழிக்கும் சவரத் தொழிலாளி ஆண்டுக்கொரு முறை மட்டுமே அறுவடைக்குப் பின் அளந்து போடும் நெல்லுக்காகக் காத்திருந்த நிலையையும், இன்றைய நவீன யுகத்தில் ஆப்பில் (செயலியில்) பதிவு செய்தால் உடனே கூகுள் மேப்பில் வீடு தேடி வந்து சிகை திருத்தும் வசதி பற்றியும் ஒப்புமை செய்து பார்க்கும் அழகிய கவிதை. 'விஜயதசமி தினம்' கவிதை யில் மரத்தில் அன்று மட்டும் பறவைகளின் கூச்சல் அதிகமாகக் கேட்கிறது. புதிதாகப் பொரிக்கப்பட்ட பறவைக் குஞ்சுகளுக்கு கல்வி கற்றல் தொடங்குகிறது. 'விஜயதசமி' அன்று குழந்தைகளை மழலையர் பள்ளியில் சேர்க்க அவதிப்படும் பெற்றோரின் நிலையும், பள்ளிகளின் வணிகவேட்டையும் எனப் பல செய்திகளை இக்கவிதை உள்ளடக்கியுள்ளது.

இவ்வாறான பல கவிதைகளை இந்நூல் முழுதும் வழங்கியுள்ளார் கவிஞர் ப.சொக்கலிங்கம். அழகியல், மண்வாசனை, சமூகச்சிந்தனை, இயற்கை நேசம், எள்ளல்சுவை எனப் பன்முகத் திறனோடு எழுதும் ஆற்றல் பெற்ற கவிஞர் ப.சொக்கலிங்கம் அவர்கள் மேலும் பல நூல்களைத் தந்து தமிழுக்கு அணி சேர்க்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

தமிழன்புடன்

கவிஞர் **சொர்ணபாரதி**

# எண்ணங்கள்

**எ**ன்னுடைய முதல் கவிதை நூல் '**பஞ்சவர்ண கிளி**' (அக்டோபர் 2020), இரண்டாவது கவிதை நூல் '**அஞ்சறைப் பெட்டி**' (ஜூன் 2021) ஆகியவற்றிற்கு கருத்து தெரிவித்து என்னை ஊக்கப்படுத்திய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

என்னுடைய தொடரும் முயற்சியாக இந்த முறை '**ஐம்புலன்**' என்ற தலைப்பில், தற்போது உங்கள் கைகளில்.

ஐம்புலன் என்பது பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகிய ஐந்து உணர்வுகளைக் குறிக்கும்.

ஐம்புலன் தன்னிச்சையாய் நம்முள் ஏற்படுத்தும் எண்ணப் பிரவாகங்கள், நம்மை நல்வாழ்க்கை வாழ வழி நடத்தப் பேருதவி யாக இருக்கும். இயந்திரகதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், அந்த எண்ணப் பிரவாகங்களை பெரும்பாலும் உதாசீனப்படுத்தி விடுகிறோம். அன்றாட வாழ்க்கையில், ஐம்புலன் என்னுள் ஏற்படுத்திய எண்ண ஓட்டங்களை, எளிதில் புரியும் வண்ணம் இந்த நூலில் கொடுத்துள்ளேன்.

கொரோனா, பெரு மழை, வெள்ளம் என அசாதாராணமான சூழ்நிலைகளில், பல்வேறு சவால்களையும், இழப்புகளையும் எதிர்கொண்டு வாழ்ந்து வரும் இன்றைய சூழலில், இந்த நூலும் தங்களுக்கு ஒரு சோர்வு நீக்கியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அச்சு வடிவில், அருமையாக இந்த நூலை வெளியிடும் திரு. **சோலை தமிழினியன்** (சோலை பதிப்பகம்) அவர்களுக்கு என் நன்றிகள். அருமையான அணிந்துரை வழங்கிய திரு. **சொர்ணபாரதி**, வாழ்த்துரை வழங்கிய தத்துவக்கவிச்சுடர் **துருவன்** அவர்களுக்கு என் நன்றிகள்.

இந்த '**ஐம்புலன்**' தங்களுடைய எண்ண ஓட்டங்களை அடுத்த தளத்திற்கு எடுத்துச்செல்லும் என்ற நம்பிக்கையுடன்.

ப.சொக்கலிங்கம்

சென்னை
25.12.2021

## கானம்

அதிகாலை கண் விழித்ததும்
இறகுகள் சிலிர்க்க
சோம்பல் முறித்து
குயில் விட்ட நீண்டகொட்டாவி
இனிய கானமாய் பூங்காளங்கிலும்

## ஆரஞ்சு மிட்டாய்

இனிப்பா புளிப்பா
விடை தெரிந்து விடும்
அடுத்த மிட்டாயில்

## வண்ணத்துப் பூச்சி

தேன் ஒழுகப் பேசிக் கொண்டிருந்தது
மலரிடத்தே!



## தேநீர்

சொந்தமண் நினைவுகள் சுரந்த
ஆனந்தக் கண்ணீரால்
சுவை கூடியிருந்தது
குளிரூட்டப்பட்ட தேநீரில்

## மார்கழிக் கோலம்

வண்ணங்களும்,
எண்ணங்களும் ஒன்றிணைய
தவழாத குழந்தையாய்
தரையில் ஒரு மார்கழிக் கோலம்

## உரையாடல்

கரையோரத் தென்னைகளுக்கும்,
கடலிற்குமிடையே உரையாடல்
காற்றின் மொழியில்

